RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt22s844

# சைவக்குரவர்களின் அன்புநெறியும் அறநெறியும்

மு. செல்வக்குமார் [அ, *], ம. மகாலட்சுமி [அ]

[அ] தமிழ்த்துறை, இராஜா நந்திவர்மன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தெள்ளார், திருவண்ணாமலை-604406, தமிழ்நாடு, இந்தியா

# Saiva Kuravargal's Love and Morality

**M. Selvakumar [a, *], M. Mahalakshmi [a]**

[a] Department of Tamil, King Nadhivarman College of Arts and Science, Thellar, Thiruvannamalai-604406, Tamil Nadu, India

* Corresponding Author: mselvam84enator@gmail.com

Received: 15-05-2021
Revised: 06-06-2022
Accepted: 13-06-2022
Published: 09-08-2022

Check for updates

**ABSTRACT**

The Devotion movement grew up with religious work and helping individual people. That is, the Devotion movement developed on the basis that charity should be given to the people living in the society as well as to the temples of God. In Saiva Samaya, by accepting morals in the name of God, not only towards human beings but also towards all living beings, with the morals of godliness and charity, the devotees, priests, and Sivadians who dedicated themselves to Lord Shiva drummed the sacrifice of Saiva Samaya. According to this, the most important and foremost people in Saivism, Tirunanasambandar, Tirunavukarasar, and Sundarar are called Devaras, and Manikkavasakara along with them are called Saivakuravas four. In this way, this article aims to know the love and morals of the Saiva Samaya and their religion and the above-mentioned humanitarian deeds special, their devotion to God, and their charitable deeds for the people. And the scriptures recited by Shivanatiyars who were possessed by the Lord came to be known as Tirumuraikal. The works of the four religious' people among them, the number of their rituals and songs (pathikams), and the four Saiva religious people who were possessed by the Lord, the charity that they did to remove the suffering of the people with the grace of God and the charity that they did with love to praise the grace of the Lord are made to be seen in this sermon as the morality and love.

**Keywords:** Thirugnana Sambandar, Thirunavukkarasar, Sundarar, Manikka Vasakar, Thirumuraikal

## முன்னுரை

அறம் காண சங்கம் வளர்த்து ஈராயிரம் ஆண்டுக்கும் மேலாய் அம்மொழிக்காகப் பல நல்வழி நூலமைத்துப் பாடி மகிழ்ந்த புலவர்கள், சங்ககாலம், சங்கம் மருவியகாலம், பக்தி இலக்கியக் காலம் காப்பியக் காலம் என்று அணிவகுத்து வந்துள்ளனர். அவ்வாறான தமிழின் வளர்ச்சியில் பிற நாட்டினரின் பங்கும் இன்றியமையாததாய் உள்ளதையும் நாம் மறந்துவிட முடியாது. நம்முடைய படைப்பினை அவர்களும் அறிந்து அவற்றினை அவர் நாட்டினரும் அறியும் வண்ணம் மொழி பெயர்த்து நமது மொழியின் நடை, சிறப்பு, இலக்கியவளம், இலக்கணச் சிறப்பு அறிய பேருதவியாய் இருந்துள்ளனர். அத்தகைய சான்றோர்களும் நம்முடைய சான்றோர்களும் ஒருமித்த கருத்தான அன்புநெறியும் அறநெறியும் என்ற கோட்பாட்டியலில் அவரவர் தம் மதத்தின் வழியோ அல்லது வழிபடும் முறையின் வழியோ ஒன்றுபட்டு தமது இறைவழிபாட்டையோ அல்லது அதனோடு

தொடர்புடைய மக்களின் அறநெறி அன்புநெறியை முறைப்படுத்துவதோடு ஒன்றாய்க் கருத்தொருமித்து செயல்படுதலைக் காணலாம். அத்தகைய கண்ணோட்டத்தில் சைவ சமயத்தில் சைவக்குரவர்களின் படைப்பினில் காணப்பெறும் அன்புநெறியை அறநெறியைப் பற்றிய ஆய்வாக இக்கட்டுரையைக் காணலாம்.

## ஆய்வு முறை

சைவ சமயத்தின் தோற்றத்தில் இன்று வரை எவ்வாறு உள்ளது. அவற்றின் நிலைப்பாடு என்று கூறும்பொழுது வரலாற்று முறை ஆய்வும் இச்சைவ சமயத்தினையும் அதன் சிறப்பினையும் சைவக்குரவர்கள் ஆற்றிய அன்புநெறியும் அறநெறியும் பற்றிய பிற நூல்களிடத்துக் கூறும் பொழுது ஒப்பீட்டு முறை ஆய்வும் இக்கட்டுரையில் பின்பற்றப்படுகிறது.

## சைவசமயம்

சைவசமயம், சிவநெறி என்றெல்லாம் அழைக்கப்படும் நெறி சிவபெருமானை முழு முதற்கடவுளாக வணங்கும் சமயமாகும். இன்றைய இந்து சமயத்தின் கிளை நெறிகளில் ஒன்றாக அமைந்து விளங்கும் சைவம், வைணவத்தைப் பின்னால் தள்ளி இந்து சமயத்தின் பெரும்பான்மையினை பின்பற்றுநர்களைக் கொண்ட சமயமாகக் காணப்படுகிறது.

இன்றைய உலகில் சுமார் 452.2 மில்லியன் சைவர்கள் காணப்படுவதாக மேற்கொள்ளப்பட்ட குடித்தொகை மதிப்பீடு ஒன்று சொல்கிறது (Johnson & Brain Grim 2013). திருக்கயிலையில் நந்திதேவர் பணிவிடை செய்ய பிள்ளையாரும் முருகனும் அருகிருக்க பார்வதி துணையிருக்க வீற்றிருக்கும் சிவபிரானே சைவர்களின் பரம்பொருளாக விளங்குகின்றார். தமிழகம் மட்டுமன்றி இந்தியாவின் பிறமாநிலமான கேரளா, காஷ்மீர் மற்றும் சிங்கப்பூர், மலேஷியா முதலான பிற நாடுகளிலும் சைவ சமயம் பின்பற்றப்பட்டு வருவதாகக் காணப்படுகிறது.

## சைவசமயத்தின் தோற்றம்

### பழங்குடித் தொடர்ச்சி

இமயமலைச் சாரலில் வாழ்ந்த மலைக்குடி வேடுவர்களின் நீத்தார் வழிபாடே சிவ வழிபாடாக வளர்ந்திருக்கிறது என்று நம்பப்படுகிறது (Tiwari, 2002). இமயம் காலத்தால் பிந்தியது என்பதால் தென்னகத்தே எழுந்த இன்னொரு மலைத் தெய்வ வழிபாடே சிவவழிபாடாக வளர்ந்து மக்கள் குடிப்பெயர்ச்சியால் இமயம் வரை நகர்ந்திருக்கிறது என்றும் சொல்லப்படுகிறது (Sem, 1999).

சிவனை உருவகிப்பதில் சாம்பல் பூசுதல், புலித்தோலாடை தரித்தல், மானையும் மழுவையும் கையில் வைத்திருத்தல், பன்றிக் கொம்பு எலும்புகளை அணிதல் போன்ற பழங்குடி அம்சங்கள் முக்கியப் பங்கு வகிப்பதால் பல இனக்குழுக்களின் கலப்பின் விளைவாகப் பிறந்த பெருந்தெய்வமே சிவன் எனலாம். நாகர் பழமை வாய்ந்த தனி இனம் என்று வாதிடுவோர் சிவனின் ஆபரணங்களாக நாகங்கள் காணப்படுவதைக் கொண்டு சிவன் நாகரின் தெய்வம் என்பார். சிவலிங்க வழிபாடு மிகத் தொன்மையானது என்றும் மானுடர்களின் மிகப்பழமையான தெய்வங்களில் ஒருவன் ஈசன் என்றும் அறிய முடிகிறது (Lochtefeld, 2002).

## தென்னகத்தில் சைவ நெறி

மலைத்தெய்வ வழிபாடு என்று கூறுகையில் பண்டைய தமிழகத்தில் பகுத்து அறியப்பட்ட ஐந்து வகைத் தமிழர் நிலத் திணைகளில் ஒன்றான குறிஞ்சித் திணையில் இடம் பெரும் ஒன்றாகும். மலையும் மலை சார்ந்த இடங்களும் குறிஞ்சி என அழைக்கப்படுகின்றது. குறிஞ்சி நிலத்திற்குக் குலதெய்வமாக சேயோன் பண்டைய கால மக்களால் வழிபடப்பட்டுள்ளார்.

## சிவனும் சேயோனும்

சேயோன் என்ற பெயர் சிவந்தவன் என்ற பொருளைத் தரும் என்பதால் சிவன், முருகன் இரண்டு பேருமே சேயோன் எனக் கூறப்பட்டதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர் (Padmanabam, 2013). சேயோன் குன்றின் மேல் அமர்ந்தவனாகவும், அழிக்கும் தொழிலைச் செய்யும் கடவுளாக முறையே தமிழ் பக்தி இலக்கியங்களும் தமிழ் நாட்டார் கருத்துகளும் எடுத்து இயம்பும் வகையில் சிவனையே நாம் மலைத் தெய்வ வழிபாட்டின் கடவுளாக ஏற்றுக் கொள்ள முடிகிறது. இவ்வாறு சைவ சமயத்தின் தோற்றம் குறித்தும், சைவ சமய முதற்கடவுள் சிவபெருமான் என்பதைக் குறித்தும் கருத்து விவாதங்கள் ஆய்வாளர்களிடையே காணப்படுகிறன என்பதை அறிய முடிகிறது.

## சைவக்குரவர்கள்

அன்பே சிவம் எனும் சைவக்கோட்பாட்டில் இறைத் தொண்டாற்றி, இறைவனின் பெயரினால் வழிபடுவோர்க்கு இன்னல்களைத் தீர்ப்பதில் நல்லவர்களாய், வல்லவர்களாய் திகழ்ந்தவர்களில் தென்னகமான நம் தமிழகத்தில் தமிழ்மொழியால் சிவபெருமானை அறியச் செய்து மக்களை அன்பின் வழியாய் அறநெறிப்படுத்தியதில் சைவ அடியார்களான திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் எனும் நால்வர் முக்கியமானவர்கள் ஆவர். இவர்களைச் சைவக் குரவர்கள் என்றும் அழைப்பர்.

## தேவாரம்

சைவ சமயத்தின் இலக்கியமான பன்னிரு திருமுறைகளுள் முதல் ஏழு திருமுறைகள் தேவாரம் என்று அழைக்கப்படுகிறது. இதனைப் பாடிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோர் தேவார மூவர் என்றழைக்கப்படுவர்.

## சைவ சமயக்குரவர்கள் பாடல்களின் எண்ணிக்கை

பன்னிரு திருமுறைகள் என்பவை பல்லவர் காலத்திலும் அதன் பின்னரும் தோன்றிய சைவ சமய நூல்களின் தொகுப்பாகும். இவை திருமுறைகள் என்றும் அறியப்படுகின்றன.

**அட்டவணை: 1** சமயக்குரவர்களின் பாடல்களின் எண்ணிக்கை

| திருமுறை | பாடியவர்கள் | பாடல் எண்ணிக்கை |
|---|---|---|
| முதலாம் திருமுறை | திருஞானசம்பந்தர் | 1469 |
| இரண்டாம் திருமுறை | திருஞானசம்பந்தர் | 1331 |
| மூன்றாம் திருமுறை | திருஞானசம்பந்தர் | 1358 |
| நானகாம் திருமுறை | திருநாவுக்கரசர் | 1070 |
| ஐந்தாம் திருமுறை | திருநாவுக்கரசர் | 1015 |
| ஆறாம் திருமுறை | திருநாவுக்கரசர் | 981 |
| ஏழாம் திருமுறை | சுந்தரமூர்த்தி | 1026 |
| எட்டாம் திருமுறை | மாணிக்கவாசகர் | 1058 |
| | மொத்தம் | 9308 |


பத்தாம் நூற்றாண்டில் இராஜஇராஜ சோழனின் ஆட்சியின் போது, சிதம்பரம் கோவிலிலே கவனிப்பாரற்றுக் கிடந்த திருமுறைகள் பூச்சிகளால் அரிக்கப்பட்டு அழிந்தவை போக எஞ்சியவற்றை நம்பியாண்டார் நம்பி என்பவர் திருமுறைகளாகத் தொகுத்தார். அவ்வாறு கிடைக்கப்பெற்ற நூல்களில் சைவ சமயக்குரவர்களின் பாடல் எண்ணிக்கைகள் 9308 பின்வருமாறு.

## சைவ நன்னெறிகள்

சைவக்குரவர்கள் தங்களின் வாழக்கை முறையை நான்கு நன்னெறிகளில் முறைப்படுத்தி அவற்றின் மூலம் தங்களின் அன்பு நெறியையும் அறநெறியையும்; இறைவன் மீது கொண்டுள்ள இறைபக்தியையும் வெளிப்படுத்தினார்கள்; இவ்வகையில் மனிதர்களும், இறைவனைத் தொழுது இறைவனுக்குத் தொண்டு புரிபவர்களாகவும், அற நெறியுடனும் ஒருவரோடு ஒருவர் சிவபெருமானின் அன்பு நெறியைப் பின்பற்றி வாழ்ந்திடும் வகையில் சைவ நன்னெறிகள் அமைக்கப்பட்டிருந்தனவாக அமைந்தன.

அட்டவணை 2. சைவ நன்னெறிகளும் அவற்றைப் பின்பற்றியவர்களும்

| | | | |
|---|---|---|---|
| 1 | சரியை | தாசமார்க்கம் | திருநாவுக்கரசர் |
| 2 | கிரியை | சற்புத்திர மார்க்கம் | திருஞானசம்பந்தர் |
| 3 | யோகம் | சகமார்க்கம் | சுந்தரமூர்த்தி |
| 4 | ஞானம் | சன்மார்க்கம் | மாணிக்கவாசகர் |




படம் 1. சமயக்குரவர்கள் மார்க்கங்கள்

## சரியை

அன்பின் துணையோடு உடம்பினால் செய்யும் இறைபணிகள் அனைத்தும் சரியை நெறியாகும். இலகுவில் செய்யக்கூடிய ஆரம்ப முயற்சியான இதற்குத் தூய தெய்வ பக்தியோடு இறையம்சமும், அன்பும் துணை நிற்க வேண்டும்.

## கிரியை

திருமலர்கள், திருமஞ்சனம முதலியவற்றால் ஒப்பனை தீபம், உபசாரங்களை ஏற்படுத்தி வலம் செய்தல், பணிதல், தோத்திரம் செய்தல், இறைவனை வழிபடுதல் எனும் இவ்வகைத் தொண்டே கிரியை ஆகும்.

## யோகம்

சரியை கிரியை ஆகிய நெறிகளை விட மேலானது யோகம் ஆகும். இயமம், நியமம், ஆசனம், பிராணயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி ஆகிய அட்டாங்க உறுப்புகளில் பயிற்சி பெற்று படிப்படியாகத் தேறியவரே யோக நெறியை அனுசரிக்க முடியும். இவ்வகையான யோக நெறி இன்றைய உலகில் மானுடங்கள் உடல் திறனுடன் வாழ வழி வகை செய்யும் ஒன்றாக அமைந்துள்ளது.

## ஞானம்

ஞானமானது ஆன்மாவாகிய தன்னைச் சிவன் பாதம் தஞ்சம் அடைதல். அதாவது சிவனை அருவம், உருவம், அருவுருவம் ஆகிய மூன்று திருமேனிகளையும் கடந்து சச்சிதானந்தப் பிழம்பாய் நீக்கமற எங்கும் நிறைந்திருக்கும் இறைவனை அறிவால் வழிபடுதலாகும். கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிஷ்டை கூடல் என்னும் நான்கு அங்கங்கள் இந்நெறிக்கு உண்டு. முன்னைய மூன்று நெறிகளிலும் நின்று பக்குவம் பெற்ற சாதனைகளை இறைவன் குரு வடிவிலே வந்து தீட்சை உபதேசம் செய்து ஞானத்தை அளித்து முத்தியை வழங்குவார்.

பொதுவாக எவரெல்லாம் இறைவனுக்குத் தொண்டும், இறைப்பயமும் நிறைந்தவராய் அறத்துடனும் வாழ முற்படுகையில் அவர்களில் அன்பானது இயல்பாகவே நிறைந்திருக்கும். அத்தகைய அன்புடையோர் மக்களிடத்தில் இறைப்பணியை மக்கள் பணியாய் செவ்வனே செய்வர்.

## திருஞானசம்பந்தரின் அன்புநெறியும் அறநெறியும்

ஞானசம்பந்தரின் நான்காம் வயதில் ஒரு நாள் காலை தந்தை சிவபாத இருதயருடன் சேர்ந்து சீர்காழி திருக்கோவிலின் திருக்குளத்திற்கு சென்றார். தந்தையார் நீர்மூழ்கி அகமருட ஜெபம் செய்தார். தந்தையை காணாமலும் முன்னைத்தவம் தலைக்கூடியதாலும் திருத்தேணிச்சிகரம் பார்த்து "அம்மே! அப்பா!" என்று அழைத்து அழுதார். அப்பொழுது திருத்தோணிபுர பெருமான் உமா தேவியாரோடும் விடைமீதமர்ந்து காட்சி கொடுத்தார். உவமையிலாக் கலை ஞானமும், உணர்வரியா மெய்ஞ்ஞானமும் கலந்த திருமுலைப்பால் ஊட்டுவாயாக எனப் பணித்தார். அப்படியே பெருமாட்டியும் எண்ணரிய சிவஞானத்து இன்னமுதம் குழைத்தருளி, உண் அடிசில் என ஊட்டினார். ஞானம் உண்ட பிள்ளையார் சிவஞானச் செல்வராய்த் திகழ்ந்தார்.

"தோடுடைய செவியன்விடை யேறியோர் தூயவெண் மதிசூடிக்

காடுடைய சுடலைப்பொடி பூசியென் உள்ளங்கவர் கள்வன்

ஏடுடைய மலரான் முனைநான் பணிந்து ஏத்த அருள்செய்த

பீடுடைய பிரமாபுரமேவிய பெம்மான் இவர் அன்றோ"

அவர் தந்தை ஏது பால் என வினவ பிள்ளையார் தன் பிஞ்சு விரல்களால் கோபுரத்தை மேல் நோக்கிக் காட்டி தோடுடைய செவியான் என்ற பதிகம் பாடினார் (Keerthi, 2014).

## திருமருகல் விடம் தீர்த்தது

ஞானசம்பந்தப் பிள்ளையார் அவர்கள் திருச்செட்டாங்குடிக்கு சென்றபின் திருமுகல் சென்று இறைவனை வணங்கி அங்கு தங்கியிருந்தார். அந்நாளில் ஒரு வணிகன் ஒரு கன்னியை உடன் அழைத்துக் கொண்டு வந்து ஒரு மடத்தில் இரவு துயின்ற போது பாம்பு தீண்டி இறந்தான்.

எவ்வளவு முயன்றும் அவனை உயிர்ப்பிக்க முடியாது போகவே அக்கன்னி அவ்வூர் இறைவனிடம் வேண்டினாள். "தேவர்கள் உய்யும்படி விடத்தை உண்டவரே! இரதி வேண்ட மன்மதனை மீட்டவரே! மார்கண்டேயனுக்காக எமனை உதைத்தவரே, திருமகள் பெருமானே, இந்த விடம் தீர்த்து

என்னைத் துன்பத்திலிருந்து மீட்க வேண்டும்"! என்று வேண்டினார். அப்பொழுது இறைவனைக் கும்பிட்டுத் திருக்கோவில் நோக்கிச் சென்று கொண்டிருந்த பிள்ளையார் காதில் இதுவிழ அருகில் சென்று "பயப்படேன்" என்று அருளி நடந்ததைக் கேட்டறிந்தார்.

வைப்பூர் தாமன் என்பவர் எனது தந்தை அவருக்குப் பிறந்த பெண்கள் எழுவர். இவன் அவனது மருமகன. என் தந்தை மூத்த மகளை இவனுக்குத் தருவதாகக் கூறி நிறைய பணம் பெற்றுக் கொண்டு வேறொருவருக்குத் திருமணம் செய்து கொடுத்து விட்டான். அதுபோல் மற்ற பெண்களையும் மணம் முடித்துக் கொடுக்கவே இவனது தளர்வு கண்டு தாய் தந்தையர்க்கு மறைத்து நான் இவனுடன் போந்தேன். இவனும் பாம்பு தீண்ட இறந்து விட்டான். நடுக்கடலில் கப்பல் கவிழ்ந்தது போன்ற துன்பத்தில் சிக்கி இருந்த எனக்கு சுற்றம் போல் வந்தீர்! என்று வணங்க பிள்ளையார் அவளுக்கு அருளும் பொருட்டு திருப்பதிகம் பாடி வழிப்பட்டார்.

"சடையாய் எனுமால் சரண்நீ எனுமால்

விடையாய் எனுமால் வெருவா விழுமால்

மடையார் குவளை மலரும் மருகல்

உடையாய் தகுமோ இவள்உன் மெலிவே"

நீர்மடைகளில் குவளை மலர்ந்திருக்கும் திருமருகல் இறைவனே! சடாமுடியை உடையவனே! இடப வாகனனே! என்று புகழ்ந்து உன் பாதங்களில் சரண் அடைந்து கிடக்கும் இப்பெண்ணின் உள்ளக் கவலையைப் போக்காமல் இருப்பது உமக்குத் தகுதியாகுமோ? என்று எடுத்துப்பாட வணிகன் உயிர்ப்பெற்று எழுந்தான் (Sivagnanam, 2009).

தொண்டர் கூட்டம் "அர அர" என முழக்கம் செய்தது. கன்னியும், வணிகனும் பிள்ளையாரது பாதங்களில் வீழ்ந்து வணங்கி பிள்ளையாரும் இறைவனின் அருள்கூறி இருவருக்கும் மணம் முடித்து வைத்து அன்போடும், இறை அருளோடும் வழி அனுப்பி வைத்தார்.

## திருநாவுக்கரசர் அன்புநெறியும் அறநெறியும்

பண்ருட்டிக்கு அருகே திருவதிகையில் தடாகையார் திருநீறிட "கூற்றாயனவாறு" எனத் தொடங்கும் திருப்பதிகம் பாடி இறையருளால் சூலை நோய் நீங்கப்பெற்றார். நீற்றரையில் சிதைவேதுமுறாது ஐந்தெழுத்து ஓதி அமர்ந்திருந்தார்.

"கூற்றாயின வாறு விலக்கிவீர்

கொடுமை பலசெய்தன நான் அறியேன்

ஏற்றாய் அடிக் கேஇர வும்பகலும்

பிரியாது வணங்குவன் எப்பொழுதும்

தோற்றாதென் வயிற்றின் அகம்படியே

குடரோடு துடக்கி முடக்கியிட

ஆற்றேன் அடியேன் அதி கைக்கெடில

வீரட் டானத்துறை யம்மானே"

சமணர்களால் இவருக்கு ஊட்டப்பட்ட நஞ்சு அமுதானது (Nagarajan, 2021).

"நஞ்சு அமுது ஆக்குவித்தார் நனிப்பள்ளி அடிகளாரே:"

நான்காம் திருமுறை 70 வது பதிகம் 5வது பாடல் (Keerthi, 2014)

## அப்பூதி மனையில் விடம் தீர்த்தல்

திருப்பழம் பணிந்து திங்களூர் வந்தார் அரசர். அங்கு அப்பூதி என்னும் ஒருவர் தன் மனைவி பிள்ளைகளுடன் வாழ்ந்து வந்தார். அவர் தான் அமைத்த சாலை, குளம், கிணறு தண்ணீர்ப்பந்தல் என அனைத்துக்கும் நாவுக்கரசர் பெயரையே வைத்திருக்கிறார் என்பதை அறிந்து அவர் இல்லத்திற்குச் சென்று அப்பூதியாரைச் சந்தித்தார். தம் தியானம் பொருளாய் விளங்கும் நாவுக்கரசர் தம் இல்லம் வருகை தந்ததை எண்ணி மகிழ்ந்து தன் குடும்பத்துடன் வணங்கி தன் இல்லத்தில் அமுது உண்ணுமாறு அப்பூதியார் வேண்டினார். அரசும் இசையவே திருவமுதும். கறியமுதும் சமைத்து திருநாவுக்கரசு எனப் பெயர் கொண்ட தம் மூத்த மகனைப் பரிகலமாக வாழைக் குருத்துக் கொண்டுவரப் பணித்தார்.

குருத்து அரியும் போது நாகம் தீண்ட விரைந்து வந்து குருத்தை தந்தையரிடம் கொடுத்து மயங்கி விழுந்து இறந்தான். இறந்த செய்தி தெரிந்தால் அரசரை அமுது உண்ணாச் செய்துவிடும் என எண்ணி பாயினால் மூடி மறைத்து விட்டு அரசரை அமுதுண்ண அழைத்தார். இறைவன் திருவருளால் நடந்ததை அறிந்த நாவுக்கரசர் உடலைக் கோவிலின் முன் கொண்டு வரச் செய்து ஒன்று கொலாம் என்றெடுத்துப் பதிகம் பாடியருளினார்.

‘பத்துக் கொலாம்அவர் பாம்பின்கண் பாம்பின்பல்

பத்துக் கொலாம்எயிறும் நெறித்து உக்கன

பத்துக் கொலாம்அவர் காயப்பட் டான்தலை

பத்துக் கொலாம்அடி யார்செய்கை தானே’

என்ற பத்தாவது பாடலில் ஈசன் அணிந்திருக்கும் ஐந்துதலை நாகத்துக்குக் கண்கள் பத்து; பற்கள் பத்து; கயிலை மலையின் கீழ் நெரிக்கப்பட்ட இராவணனுக்கு உதிர்ந்த பற்கள் பத்து; தலைகள் பத்து; அடியார்களுக்கு வேண்டும் குணங்கள் பத்து என்ற கருப்பட அமைந்துள்ள இப்பதிகத்தைப் பாடி முடித்தார் (Sivagnanam, 2009). அப்பொழுது பிள்ளை உயிருடன் எழுந்தான். பின்னர் அப்பூதியார் திருமனையில் அமுதுசெய்து திருப்பழனம் வந்து அப்பூதியாரை பதிகத்துள் வைத்துப் பாடிச் சிறப்பித்தார்.

## சுந்தரர் அன்புநெறியும் அறநெறியும்

திருமுனைப்பாடி நாடு திருநாவலூரில், ஆதி சைவர் குலத்தில் தந்தை சடையனார் தாயார் இசைஞானியாருக்கு மகனாகப் பிறந்தவர் சுந்தரர் ஆவார். இவருக்குப் பெற்றோர் இட்ட திருநாமம் நம்பியாரூரர் ஆகும். வீதியில் விளையாடிக் கொண்டிருந்த ஆரூரரின் பேரெழிலையும் பொலிவினையும் கண்ட அந்நாட்டு அரசன் நரசிங்கமுனையரையர் சடையாரிடம் தான் அந்தக் குழந்தையை வளர்த்துக் கொள்வதாகக் கூறி தன்னுடன் அழைத்துச் சென்றார். அரண்மனையில் வளர்ந்தாலும், மறையிலும் ஆகமங்களிலும் கற்றுத் தேர்ச்சி பெற்று விளங்கி திருமணப் பருவத்தை எய்தினார். திருமண நாளும் வந்தது. திருமஞ்சனம் ஆடிப் புத்தாடை புனைந்து, குதிரை ஏறி உறவினர் நண்பர் புடை சூழத் திருமணப் பந்தல் வந்து அமர்ந்தார்.

அங்கு இறைவன் மறைமுதியோன் வேடம் தாங்கி வந்து இந்தத் திருமணக் கோலத்திலுள்ள நம்பிக்கும் எனக்கும் ஒரு வழக்குண்டு. இவன் பாட்டன் எழுதிய ஓலைப்படி இவன் எனக்கு அடிமை என்றார் ஆரூரர். அதெப்படி ஐயா ஒரு அந்தணன் இன்னொரு அந்தணனுக்கு அடிமையாக முடியும். இவ்வாறு கூறும் நீர் என்ன பித்தனா எனக் கேட்டார்

உம்மை எனக்கு அடிமை என்று சொன்னதற்கு என்னிடம் சான்றுள்ளது எனக்கூறி முதியவர் ஒரு ஓலையைக் காட்டினார். உடனே ஆரூரர் அந்த ஓலையைப் பற்றிக் கிழத்தெறிந்தார். முதியவர் கிழித்தது படி ஓலைதான் என்னிடம் மூல ஓலை உள்ளது என்று கூறினார்.

சுந்தரர் அம்முதியவரின் சொந்த ஊரான திருவெண்ணைநல்லூர் சென்று இவ்வழக்கினை தீர்க்கலாம் என்று கூறிப் புறப்பட்டார். அங்கு அந்த ஓலையில் உள்ள கைச்சாந்தும், ஆரூராரின் பாட்டன் கைச்சாந்தும் ஒன்றாய் இருந்தபடியால் அவர் அடிமை என ஒப்புக் கொண்டு முதியோருடன் திருவெண்ணைநல்லூரிலுள்ள 'அருள்துறை' என்னும் சிவாலயம் சென்றார். அருள்துறை சென்றவுடன் முதியோர் மறைந்தார். முன் சென்ற முதியவரைக் காணாமல் பின் வந்தவர்கள் திகைக்க இறைவன் இடப வாகனனாய்க் காட்சி தந்து 'ஆரூரனே! நீ எம் தொண்டன். மங்கையர் மையலில் மனம் வைத்தாய், அதனால் இங்கு பிறந்தாய் முன் கூறியபடி உம்மை தடுத்தாட் கொண்டோம்!' எனத் திருவாய் மலர்ந்தார்.

ஆரூராரும் எளியேனை வலிதில் தடுத்தாட் கொள்ள வந்த பரம்பொருளே! நும்மை எப்படிப் போற்றிப் புகழ்வேன் எனக்கூற இறைவன் அதற்கு என்னை முதலில் பித்தனா எனக் கேட்டாயே அவ்வாறே 'பித்தா எனப் பாடுக' எனக்கூற ஆரூரரும் அவ்வாறு தன்னைத் தடுத்தாட் கொண்ட இறைவனைப் பாடினார்.

"பித்தாபிறை சூடிபெருமானேஅரு ளாளா

எத்தான்மற வாதேநினைக்கின்றேன்மனத்(து) உன்னை

வைத்தாய்பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர் அருட் டுறையுள்

அத்தா உனக்கு ஆளாய்இனி அல்லேன் எனல் ஆமே". (Nagarajan, 2021)

## முதலை உண்ட பிள்ளையை மீட்டது

நம்பியூரார் கொங்கு நாட்டு திருப்புக்கொளியூர் வந்து மாடவீதி வழியே போய்க் கொண்டிருந்தபோது அங்கு ஒரு வீட்டில் மங்கல வாத்தியம் முழங்க, மற்றொரு வீட்டில் அழுகை ஒலி கேட்டது. இது ஏன்? என வினவினார். அங்கிருந்தோர் ஐந்தாவது நிரம்பிய சிறுவர் இருவர் மடுவில் குளித்த போது ஒருவனை முதலை விழுங்கியது. பிழைத்த சிறுவனுக்கு இன்று பூணூல் கல்யாணம் இந்த மனை. அந்த மனையில் பிள்ளையை இழந்த பெற்றோர் அழுகை என்றார். நம்பிகள் அவ்விடத்தின் சற்றே நின்றார்.

அப்பொழுது நம்பி வருகை கேட்டு மகனை இழந்த பெற்றோர் இவர் வரவுக்கு மகிழ்ந்து அழுகை நீங்கி வந்து தொழுதனர். அவர்களிடம் இன்ப மகனை இழந்தவர்கள் நீரோ? என்று வினவ, அது முன்பு நிகழ்ந்தது. இப்பொழுது தங்களை தரிசிக்கும் பேறு பெற்றோம் என்றனர். அப்பெற்றோரது அன்பு கண்டு திருவருள் துணை கொண்டு முதலை வாயிலிருந்து பிள்ளையை மீட்ட பின்பே அவிநாசியைத் தொழுவேன் என்று மடு எங்கே? என்று வினவி அம்மடுவுக்குச் சென்று கரையில் நின்று பதிகம் பாடினார். பதிகத்தின் நான்காவது பாடலைப் பாடும் முன்னரே முதலை பிள்ளையை உமிழ்ந்தது.

"உரைப்பார் உரைஉகத்து உள்கவல்லார் தங்கள் உச்சியாய்
அரைக்கு ஆடு அரவா ஆதியும் அந்தமும் ஆயினாய்

புரைக்காடு சோலைப் புக்கொளி யூர்அவி நாசியே

கரைக்கால் முதலையைப் பிள்ளை தரச்சொல்லு காலனையே"

சோலை சூழ்ந்த திருப்புக்கொளியூரில் அவிநாசித் தளத்தில் எழுந்தருளி இருப்பவனே! இம்மடுவின் கரையில் முதலை பிள்ளைகள் உடலையும், காலன் உயிரையும் தரப்பணிப்பாயாக என்று வேண்டினார் (Nagarajan, 2021).

உடலை முதலையும், உயிரைக் காலனும் கொண்டு சென்றனர். இது விதிப்படி நடந்த செயல் என்றாலும் ஆதியும் அந்தமுமாக விளங்கும் நீ எனக்காக இதைச்செய்வாயாக என விண்ணப்பிக்கிறார். முதலை வயிற்றில் கிடந்த (இரண்டு ஆண்டுகால வளர்ச்சியுடன் பிள்ளையை முதலை உமிழவே தேவர்கள் மலர் மழை பெய்தனர். உலகர் அதிசயித்தனர். பிள்ளையையும் உடன் அழைத்துக் கொண்டு போய் அனைவரும் அவிநாசியப்பரைத் தொழுதனர். பின்னர் நம்பிகள் அங்கிருந்து புறப்பட்டனர்.

## மாணிக்க வாசகர் அன்புநெறியும் அறநெறியும்

பாண்டிய நாட்டில் மதுரைக்கு அருகே. வைகை ஆற்றின் கரையில் அமைந்துள்ள வளமான திருவாதவூர் என்னும் இடத்தில் அந்தணர் குலத்தில் பிறந்தவர் மாணிக்கவாசகர். இவரது தந்தையார் சம்புபாதாசிரியர். தாயார் சிவஞானவதி பல வருடங்கள் குழந்தைப்பேறின்று திருவாதவூர் பெருமான் வேண்டி ஆண் மகவு பிறந்ததால் இவருக்கு திருவாதவூரர் எனப்பெயர் சூட்டினார். கல்வி. அறிவு. ஞானம, நூல்கள், புராணங்கள், வேதங்கள் என அனைத்தும் நன்கு கற்றறிந்தவர்.

திருவாதவூரர் திறமையை அறிந்த பாண்டிய மன்னர் அவரைத் தனது அரசவைக்கு முதலமைச்சர் ஆக்கினார். அவரது ஆட்சித் திறமையை அறிந்து மன்னர் அவருக்கு தென்னவன் பிரம்மராயன் என்ற பட்டத்தையும் சூட்டினான்.

சிறப்பாக ஆட்சி நடந்து கொண்டிருந்த பொழுது மன்னனுக்கு ஒற்றர்கள் மூலம் கிழக்குக் கடற்கரைப் பகுதியில் சிறந்த அரபு நாட்டுக் குதிரை வந்ததாகக் கூறப்பட்டது. மன்னர் 10000 போர் காசுகளோடு வாதவூரரைத் குதிரை வாங்கி வர அனுப்பப்பட்டார்.

கிழக்குக் கடற்கரை நோக்கிப் பயணித்துத் திருப்பெருந்துறை என்ற ஊருக்கு சென்ற பொழுது. சிவ ஆகம ஒலி கேட்கப்பட்டு ஒலி வந்த திசை நோக்கிச் செல்ல ஒரு சோலையில் ஒரு சிவ ஞானியும், சிவனடியார்களையும் கண்டு மனமகிழ்ந்தார்.

சிவஞானியார் எல்லையில் சிவ ஞான போகம் நூல் கண்டு அதன் பொருள் என்ன என்று வினவினார். சிவம் முழுமுதற் ஞானம் ஆகிக் கடவுள் அறிதல் போதும் - தெளிதல் போன்றது என்றார்.

எனவே சிவனை அறிந்து கொள்வதற்கான நூல் நீ விரும்பினால் உனக்கு இதைக் கற்பிப்பேன் என்று துறவி கூறினார். ஞானியார் சிவ தீக்சை சில தீக்கை அளித்து அவரது காதில் 'நவசிவாய' என்னும் மந்திரத்தைச் சொல்லி அவரை அடியாராக மாற்றினார். துறவி தனது திருவடிகளை தலைமீது வைக்க சிவஞானம் பெற்றுப் பாடல்களைப் பாடினார். திருவாதவூரை ஆட்க்கொள்ளத் துறவியாக வந்த சிவபெருமான் மகிழ்ந்து நீ பாடிய பாடல்கள் ஒவ்வொன்றும் மாணிக்கமாக இருக்கிறது. எனவே நீ மாணிக்க வாசகார் எனப் பெயர் சூட்டி ஆசிர்வதித்தார்.

துறவி அவரை ஆலயத்தைப் புதுபிக்குமாறு ஆணையிட்டு மறைய தன்னை வந்து ஆட்கொண்டது இறைவன் என மாணிக்கவாசகர் உணர்ந்து பாடல்கள் பாடி ஆலயத் திருப்பணிகளை செய்து வந்தார்.

மாணிக்கவாசகரின் முதல் பதிகமாக தூய பஞ்சாச்சரமான நமசிவாய என்னும் மந்திரத்துடன் தொடங்கும் சிவபுராணத்தைப் பாடினார். பன்னிரு திருமுறைகளில் எடுத்த எடுப்பிலேயே திருவைந்தெழுத்தினைக் கூறித் தொடங்கும் புனிதமானதும், தூய்மையானதும் திருவாசகமே.\

"நமச்சிவாய வாஅழ்க

நாதன்தாள் வாழ்க

இமைப்பொழுதும் என்னெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க

கோகழி ஆண்ட குருமனிதன் தாள் வாழ்க

ஆகமம் ஆகநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க

ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க"

சிவபுராணம் என்பது சிவபெருமானது பழமையை எடுத்துச் சாற்றுவது ஆகும் (Nagarajan, 2021). பழம்பெருமை என்பது இயல்பான அருள் தன்மையாகும். இயல்பான அருள்தன்மை என்பது பெருங்கருணை வயத்தால் நிகழ்வது என்க. சிவ என்பது பதி எடுத்தாதலின் யாவற்றுக்கும் மூலமாகவும், அடிப்படையாகவும், தலையாகவும் விளங்கும் தன்மையாதல் எனலாம். இது தலைமையும் பழமையுடையதாதலின் சிவபுராணம் எனப்பட்டது.

### பிறவியிலிருந்து ஊமையாயிருந்த பெண்ணைப் பேச வைத்தது: பிறவி தொட்டு ஊமையாயிருந்த பெண்ணைப் பேச வைத்த தன்மை

ஈழத்தரசனும், புத்தசாரிகளும் புத்தரே தெய்வம் என்று நிலை நாட்ட தில்லைக்குச் சென்றனர். அவர்களுடன் ஈழத்தரசனின் வாய் பேச முடியாத மகள் இருந்தாள். தில்லையில் புத்தசாரிகளுக்கும் மாணிக்கவாசகருக்கும் நடந்த விவாதத்தில் சிவனைப் பற்றி நிந்தை கூறியதால் சினம் கொண்ட மாணிக்கவாசகர் கலை மகளை வேண்டி சிவநிந்தை செய்யும் நாவில் நீ இருத்தல் பொருந்துமோ? இவர்கள் நாவைவிட்டு அகல்வாயாக் இது இறைவன் ஆணை என்று கூறினார். அவ்வளவில் புத்தகுருவும், அவருடன் வந்தவர்களும் ஊமைகளாயினர்.

இதனைக் கண்டு வியப்புற்ற ஈழமன்னன் வாதவூரரிடன் அடிகளே என் பெண் பிறவி முதல் ஊமையாக இருக்கிறாள்; நீங்கள் அவளைப் பேசச் செய்தாள் நான் தங்களுக்கு அடிமையாவேன் என்றார். வாதவூரரும் சிவனை வேண்டி அப்பெண்ணை அழைத்துச் சபைக்கு வரவழைத்து இப்புத்த குருக்கள் கேட்ட கேள்விகளுக்கு நீயே பதில் கூறுவாயாக என்று கூறி புத்த குருக்கள் வினவியதைக் கேட்டார். அதற்கு அப்பெண் வாய் திறந்து பதில் கூறினார். புத்த குருவின் வினாக்களை மாணிக்க வாசகரே அப்பெண்ணிடம் கேட்க அப்பெண் அதற்கு விடையளித்தாள். இந்த வினா விடைகள் தாம் திருச்சாழல் என்ற திருப்பதிகமாக அமைந்தது.

“பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்

பேசுவதும் திருவாயால் மறைபோலுங் காணோடீ

பூசுவதும் பேசுவதும் பூண்பதுவுங் கொண்டென்னை

ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ”

திருவாசகம் - திருச்சாழல் பாடல் எண்:1; சாழல் என்பது மகளிர் ஆடும் ஒருவகை விளையாட்டகும். அவ்விளையாட்டின்கண் மகளிர் பாடும் பாட்டாக இதனை மாணிக்க வாசகர் அருளிச் செய்துள்ளார் (Nagarajan, 2021).

இறைவன் தாயும் தந்தையும் இல்லாதவன். வேறு ஒருவரும் அவனுக்குத் துணையில்லை. உலகை நடத்தும் அவன் இவ்வாறு துணையற்ற தனியனாய் இருத்தல் பொருந்துமோ? என்பது வினா. அவன் வெகுண்டால் முன் நிற்பது ஒன்றுமில்லையாதலால் அவனுக்குத் துணை வேண்டுமா என்பது அதற்கு என்பது விடை. திருவாசகத்தை ஆங்கில மொழியில் மொழி பெயர்த்தவரான ஜியு. போப் மாணிக்கவாசகரைப் பற்றி “உலக வரலாற்றிலேயே மேதையான மாணிக்க வாசகரை விடப் புலமை, உழைப்பு, இன்பத்தைப் பொறுத்தல் இடையறா நிலைத்த பக்தி பண்புகளுடன் நம் மனத்தைக் கலக்கின்றவர். வேறு யாருமில்லை என்று குறிப்பிடுகின்றார்.

## முடிவுரை

தமிழ் மொழிப் படைப்புகளில் பல்வேறு இலக்கிய நூல்கள், பக்தி இலக்கியங்கள் படைக்கப்பட்டிருந்தாலும் இறைவனுக்குச் செய்யும் தொண்டில் நன்னெறிகள் சேர்ந்ததாகவும், அவை அன்பு தேவைப்படும் மனிதத்திலும் சென்றடைகிறது. மனிதன் நியாயத் தன்மை இழக்காத அறச்செயல்களில் என்றும் தொடர்ந்து கொண்டே இருக்கும் நிலையையே சைவ சமயக்குரவர்களின் படைப்புகளில் பெரிதும் காணப்படுகிறது. அன்றைய காலகட்டங்களில் இவை பெரிதும் அறியப்படாமல் இருந்தது போய் இன்றைய நவீன தொழில்நுட்ப உலகில் அவர்களின் படைப்பும் இறைவழியில் கூறப்பட்ட அன்புநெறியு அறநெறியுடன் இன்னும் அதிகபடியான அன்புக்குரியவர்களைச் சென்றடையவும் செய்யும். மக்களுக்கு செய்யும் தொண்டானது இறைவனுக்கு செய்வதாய் அமையும் நோக்கில் சமயக் குரவர்களின் இறையருள் பணியும், மக்களுக்காகச் செய்த அன்பு மற்றும் அறம் சார்ந்த பணிகளும் அவர்களின் அன்புநெறிகளையும் அறநெறிகளையம் நாம் தெரிந்து கொள்ளும்படியாய் அமைந்தது. மேலும் பன்னிரு திருமுறைகளில் ஏனைய திருமுறைகளையும் முறையே காணும் பொழுது இன்னும் ஏராளமான சைவ சமயத்தினுள் உள்ள அன்பு நெறியையும்

அறநெறியையும் காண முடியும். அதன் மூலம் அந்நெறிகள் இக்கால சைவ நூல்களில் எவ்வாறு அமைப்பட்டுள்ளது என ஒப்பீட்டுப் பார்க்கும் ஒரு ஆய்வுக் களத்திற்கு ஏதுவாக இக்கட்டுரை மேலாய்வுக் களங்களை இட்டுச் செல்கிறது.

## References


Elavazhagan, M., (2018) Thiruvasagam Enum Malaithen, Bangalore, India.

Johnson, M., Brain Grim J., (2013) The World's Religions in Figures, John Viky and Sons, Hoboken, USA.

Keerthi, (2014) Nalvar Devaram, Aruna Pathippagam, Chennai, India.

Lochtefeld, J.G., (2002) The Illustrated Encyclopedia of Hinduism (Vol-1), The Resen Publishing Group, New York, NY.

Nagarajan, K., (2021) thevaram moolamum uraiyum, Ram Pathippagam, Chennai, India.

Padmanabam, C., (2013) Srilanka Tamil Sasanankal, Coimbatore, India.

Sem, S.N., (1999) Ancient Indian History and Civilization, New century book house, Chennai, India.

Sivagnanam, V., (2009) Devara Moovar Valvum Vakkum, Vijaya Pathippagam, Chennai, India.

Tiwari, S.K., (2002) Tribal Roots of Hinduism, Sarup & Sons, New Delhi, India.



**Funding:** No funding was received for conducting this study.


**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License